சார்பு நீதிமன்றம், மேலூர்

நாள்: 09.04.2026
ம.சா.1 – லெட்சுமி W/o. கண்ணன்
MCOP No.4/2023
(சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.)
4ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :

என்னுடைய முதல் தகவல் அறிக்கை பதிவுசெய்த புகாரில் விபத்து நடந்தவுடன் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் என் கணவரை அழைத்து மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நானும் ஆம்புலன்சில் சென்றேன். விபத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் பார்த்தேன். நானும் என் கணவரும் மளிகை சாமான்கள் வாங்கி கொண்டு இருசக்கர வாகனத்தில் இருந்து நான் இறங்கி நின்று கொண்டிருந்தேன். பின்னால் இருசக்கர வாகனத்தில் வந்த நபர்கள் அதிவேகமாக இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து என் கணவர் வந்த இருசக்கர வாகனத்தின் மீது மோதி என் கணவர் தூக்கி எறியப்பட்டார். நான் எனது மனுவிலோ, முதல் விசாரணை வாக்குமூலத்திலோ விபத்தை நான் நேரடியாக பார்த்தேன் என்று குறிப்பிட்டு சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியிருக்கிறேன். அவ்வாறு விபத்தை நான் நேரடியாக பார்த்ததாக சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக பின்யோசனையுடன் நேரடியாக பார்த்ததாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையில் மளிகை சாமான்களை வாங்கிகொண்டு வரும்போது என்று தான் குறிபபிட்டுள்ளதே தவிர உடன் நான் சென்றதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பதட்டத்தில் நான் சொல்லவில்லை. விபத்தானது, மேலூர்-சிவகங்கை சாலையில் நடந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த போது என் கணவர் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றாரா என்றால் ஆமாம் வாகனத்தை ஓட்டி என்னை இறக்கிவிட்டு,

நின்றுகொண்டிருந்தார். விபத்தானது, மேலூர்-சிவகங்கை செல்லும் சாலையில் மேலூர்-சிவகங்கை மார்க்கமாக என் கணவர் வண்டியை ஓட்டி சென்றாரா என்றால் ஆமாம். விபத்தானது நடக்கும் போது, சிவகங்கையில் இருந்து எதிர்த்து வந்த இருசக்கர வாகனம் நாங்கள் வண்டியை திருப்பிய போது என் கணவர் வண்டி மீது மோதியது. எதிர்த்து வந்து என் கணவர் மீது மோதிய இருசக்கர வாகனமானது பதிவு எண் இல்லாத வண்டி என்றால் சரிதான். என் கணவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் விபத்தின் போது இருந்ததா என்றால் இல்லை. விபத்தின் போது என் கணவர் தலைக்கவசம் பயன்படுத்தினாரா என்றால் இல்லை. விபத்து தொடர்பான குற்றவியல் வழக்கில் உள்ள மாதிரி வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. மாதிரி வரைபடத்தை தாக்கல் செய்தால் என் கணவர் தவறான திசையில் சென்ற விபரம் தெரியவரும் என்பதால் தான் அதை வழக்கில் தாக்கல் செய்யாமல் மறைத்துவிட்டோம் என்றால் சரியல்ல. உரிய ஓட்டுநர் உரிமம் இல்லாமல் என் கணவர் வண்டியை ஓட்டதெரியாமல் இருசக்கர வாகனத்தை ஓட்டி விபத்துக்குள்ளானார் என்றால் சரியல்ல. விபத்து என் கணவர் கவனக்குறைவு காரணமாக நடந்தததால் 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடு தொகையும் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. என் கணவர் விபத்து நடந்த போது விவசாய கூலி வேலை செய்து வந்தார். அவருக்கு வருமானம் இருக்கிறது என்பதை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவருக்கு வயது எவ்வளவு என்பதை நிருபிக்கக்கூடிய ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் ஆதார் அட்டையை தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய கணவருடைய பிறந்த வருடம் 1973 என்று ஆதார் அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தெரியவில்லை. ஆதார் அட்டையில் தேதியோ, மாதமோ குறிப்பிட்டு சொல்லப்படவில்லை

என்றால் சரிதான். என் கணவர் தொடர்சிகிச்சையில் இருக்கிறார் என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் கணவருக்கு சிறப்பு மருத்துவ குழுவினர் கொடுத்த ஊனச்சான்றிதழில் அவருக்கு எந்த ஊனமும் ஏற்படவில்லை என்று சான்றளித்துள்ளனர் என்றால் சரிதான். என் கணவருக்கு எவ்வித ஊனமும் ஏற்படவில்லை என்றும் அவருக்கு அதிக இழப்பீட்டு தொகையை வாங்கிகொடுக்கவேண்டும் என்று எண்ணி வழக்கை நாங்கள் நடத்தி வருகிறோம் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தார் என்று குறிப்பிட்டு அவர் பெயர் கார்த்தி என்றும் ஆனால் அவர் பெயர் முதல் தகவல் அறிக்கையில் பதிவு செய்யப்படவில்லை என்றால் அவர் பெயர் எனக்கு அப்போது தெரியாது. ஓட்டிவந்த நபர் கார்த்தி தான் என்பதை நிருபிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் தெரியவில்லை. என்னுடைய மனுவில் மோதிய இருசக்கர வாகனத்தின் பதிவு எண் புதிய வண்டி என்பதால இல்லை என்றும் அதற்கு பதிலாக வண்டியின் இன்ஜின் எண்ணையோ, சேஸ் எண்ணையோ குறிப்பிட்டு நான் சொல்லவில்லை என்றால் தெரியவில்லை. மேற்படி மனுவில் குறிப்பிட்டுள்ள வாகனம் தான் முதல் தகவல் அறிக்கையில் சொன்ன வாகனம் என்பதை குறிப்பதற்கு எவ்வித ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆகையால் அதை நான நிருபித்து ஆக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. ம.சா.ஆ.2 காப்பீட்டு நகலில் இருசக்கரவாகனத்தின் பதிவு எண்ணோ, என்ஜின் எண்ணோ, சேசிஸ் எண்ணோ மேற்படி ம.சா.ஆ.2 ஆவணத்தில் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் கார்த்திக் என்பவருக்கு அதன் உரிமையாளருக்கும் என்ன உறவுமுறை என்று தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இருசக்கர வாகனம் எப்போது எடுக்கப்பட்டது, எந்த இலக்கை அடைவதற்காக எடுத்து செல்லப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

1ம் எதிர்மனுதாரர் இயக்கி வந்த இருசக்கர வாகனத்திற்கும் இந்த வழக்கிற்கம் எந்த சம்பந்தமும் இல்லை என்றும் முதல் தகவல் அறிக்கையில் உள்ள இருசக்கர வாகனத்திற்கு 4ம் எதிர்மனுதாரர் காப்பீடு செலுத்தவேண்டிய கட்டாயம் இல்லை என்றம் 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து இந்தமனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்டபடியால் அவரது வாரிசுதாரரை இந்த வழக்கில் சேர்க்கவேண்டிய கட்டாயத்தில் உள்ளோம் என்றும் ஆகையால் அந்த வாரிசுகளை சேர்த்து தான் வழக்கை மேல்நடத்தவேண்டும் என்றால் சரியல்ல. பல்வேறு கட்டங்களில் உள்ள இழப்பீட்டு தொகை மிகைப்படுத்தி கூறப்பட்டுள்ளபடியால் இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

SAMUNDESWARIPRABHA

Digitally signed by SAMUNDESWARIPRABHA
Date: 2026.04.09 19:37:46 +0530

**Sub Judge**

**Melur**